## ABSTRACT

Schemes – State Scheme – School Infrastructure Development Scheme (SIDS) – Implementation of the Scheme during the year 2021-2022 at an estimated cost of Rs.115,78,47,500/- Administrative Sanction and Financial Sanction of funds Rs.112,01,47,500/– Guidelines prescribed - Orders – Issued.

---

**Rural Development and Panchayat Raj (SGS.1) Department**

**G.O.(Ms.) No.36**

**Dated:23.03.2022**
**பிலவ, பங்குனி 9–ந்தேதி**
**திருவள்ளுவர் ஆண்டு–2053**
**Read:**

From the Director of Rural Development and Panchayat Raj Letter.
No. 49955/2021/SSS-2, dated 17.11.2021and 6.12.2021.

--------

**ORDER:**

In the Letter read above, the Director of Rural Development and Panchayat Raj has stated that the Panchayat Union Primary and Middle Schools located in Rural and Urban areas are the property of the Panchayat Unions concerned. As per Section 112 of Tamil Nadu Panchayat Act, 1994, it is the statutory responsibility of the Panchayat Unions concerned to ensure the maintenance of infrastructure facilities in these Schools. Therefore, School Infrastructure Development Scheme (SIDs) aims to facilitate discharge of the above statutory obligations of the Panchayat Union and ensure the provision of repair and renovation of existing infrastructure facilities viz repairs to existing toilets, provision of conventional chulhas, repairs to existing water supplies, repairs to existing school class rooms, repairs to existing kitchen sheds in the Panchayat Union Primary and Middle schools located in rural and urban areas.

2. He has further stated that the Panchayat Union Primary and Middle Schools located in rural and urban areas are the property of the Panchayat Unions concerned as such an amount of Rs.150.00 Crore shall be met out from the Capital Grant Fund (20%) vested with District Planning Committee.

3. The Director of Rural Development and Panchayat Raj has requested the Government to sanction and release a sum of Rs.150.00 Crore by approving the Draft Guidelines for the implementation of the School Infrastructure Development Scheme (SIDS) for the year 2021-2022.

4. The Government have carefully examined the proposal of the Director of Rural Development and Panchayat Raj for the implementation of School Infrastructure Development Scheme (SIDS) for the year 2021-2022 in detail and decided to accept the same and issue the following orders:-

(i) Administrative Sanction is accorded for a sum of Rs.115,78,47,500/- (Rupees One Hundred and Fifteen Crore Seventy Eight Lakh Forty Seven Thousand and Five Hundred only)and Financial sanction is accorded for the release of Rs.112,01,47,500/- (Rupees One Hundred and Twelve Crore One Lakh Forty Seven Thousand and Five Hundred only) for the implementation of School Infrastructure Development Scheme (SIDS) for the year 2021-2022 and the Director of Rural Development and Panchayat Raj is hereby permitted to incur the unspent amount available with the office of Director of Rural Development and Panchayat Raj to the tune of Rs.3,77,00,000/- (Rupees Three Crore and Seventy Seven Lakhs only).

(ii) Detailed Guidelines for the implementation of School Infrastructure Development Scheme (SIDS) for the year 2021-2022 is annexed to this order.

5. The Director of Rural Development and Panchayat Raj is requested to ensure the proper utilization of proposed fund with utilization certificate and to send the periodical progress report to Government.

6. The expenditure sanctioned in para 4(i) above shall be debited to the following Heads of Account :

| | |
|---|---|
| 3604-00-Compensation and Assignments to Local Bodies and Panchayat Raj Institutions – 200 – Other Miscellaneous Compensations and Assignments – State's Expenditure – BP Capital Grant Fund for Rural Local Bodies – 309 Grants in Aid – 02 – Grants for Creation of Capital Assets. (DPC 3604-00-200-BP-30902) IFHRMS | Rs.112,01,47,500/- |

7. Necessary funds will be provided in FMA/FSE 2021-22. Pending provision of such funds, the Director of Rural Development and Panchayat Raj is authorized to draw and disburse the amount sanctioned in para 4 above to the Districts as per the revised District-wise tentative allocation of funds under School Infrastructure Development Scheme for the year 2021-22.

8. The Director of Rural Development and Panchayat Raj is directed to monitor the works very closely and ensure that the quality of works done as per norms. Three stages of photography of all works, (i.e) prior, during and after the completion of works is mandatory.

9. This order issues with the concurrence of Finance Department vide its U.O.No.8406/Fin(RD)/2022, dated:21.3.2022.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**P.AMUDHA**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

To
The Director of Rural Development and Panchayat Raj, Chennai–15.
All District Collectors (except Chennai) (through the Director of Rural Development and Panchayat Raj, Chennai–15 ).
All Project Directors, District Rural Development Agencies, (through the Director of Rural Development and Panchayat Raj, Chennai-15).
The Commissioner of Treasuries and Accounts, Chennai-35.
The Principal Accountant General, Chennai - 9/18/35.
The Pay and Accounts Officer(Secretariat), Chennai-9.
The Pay and Accounts Officer(East, North, South), Chennai-8/1/35.
The Pay and Accounts Officer, Madurai.
All District Treasury Officers.
The National Informatics Centre, Chennai-9.

**Copy to**

Hon'ble Chief Minister's Office, Chennai-9.
The Special Personal Assistant to Hon'ble Minister for Rural Development, Chennai-9.
The Private Secretary to Chief Secretary to Government, Chennai-9.
The Senior Principal Private Secretary to Principal Secretary to Government, Rural Development and Panchayat Raj Department, Chennai –9.
Finance (BG-I/BG-II/RD) Department, Chennai – 9.

**// FORWARDED BY ORDER //**

23-3-2022
**Section Officer.**

**G.O.(Ms) No.36 RURAL DEVELOPMENT AND PANCHAYAT RAJ (SGS.1) DEPARTMENT, DATED:23.03.2022**

**ANNEXURE**

## Guidelines for implementation of School Infrastructure Development Scheme (SIDS) for the year 2021-22

### Introduction:

Panchayat Union Primary and Middle Schools located in rural and urban areas are the property of the Panchayat Unions concerned. As per section 112 of the Tamil Nadu Panchayats Act, 1994, it is the statutory responsibility of the Panchayat Unions concerned to ensure the maintenance of infrastructure facilities in these schools.

This scheme aims to facilitate discharge of the above statutory obligations of the Panchayat Unions and ensure the maintenance and renovation of existing infrastructure facilities in the Panchayat Union Primary and Middle Schools located in rural and urban areas.

The programme envisages improvement of all the Panchayat Union Primary Schools and Middle Schools in rural and urban areas in a phased manner.

### 1. Selection of schools:

Schools should be selected only from villages where the AGAMT -II is implemented on that particular year. The Panchayat Union Schools located in urban areas shall also be taken up.

Before taking up repair and renovation work of the existing building, a certificate of structural stability shall be obtained from the Assistant Executive Engineer (RD) concerned.

Repair and renovation work required shall be taken up only in those Panchayat Union schools where repair and renovation have not been carried out in the last 5 years under any other scheme.

New school building constructions should not be taken up without getting concurrence from the Director, Rural Development and Panchayat Raj.

### 2. Type of repair/ renovation works

**Repair to the existing facilities inside the school shall be taken up strictly in the following order of priority:-**

**a) Repairs to existing toilets**

The following repair works in existing toilets shall be taken up

i) The repairs and renovation of the existing toilets like repairs to RCC roof, walls, floors, drains, squatting pans, septic tanks etc.

ii) Wherever required, sanitary tiles may be fixed on the floor and inside walls.

iii) Water supply should be provided in the toilets, either by providing taps and /or constructing water storage tank.

iv) White washing and colour washing of the toilets (except those buildings, where white washing / colour washing was done within the last 5 years under any other scheme).

**b) Provision of conventional chulhas**

i) Conventional chulhas may be provided in place of incinerators. Provision of new incinerators may be avoided. Wherever chulhas are provided the safety of students should be ensured.

**c) Repairs to existing water supply works**

i) If the existing water supply system is damaged, repairs should be carried out to provide water supply to the school.

ii) Extension of pipe line works may be taken up, wherever required.

iii) Water supply facilities is mandatory in all toilets especially the girls toilets in Panchayat Union Primary and Middle School.

iv) If required, new drinking water supply connection may be provided from the nearby water supply line or Overhead Tank (OHT) of the Panchayat along with a small overhead storage tank. Bore-well water can be provided for other utilities.

v) The tanks being installed should be Sintex tank(s) – Cement / concrete tanks should be avoided. Wherever necessary and feasible new bore well can also be taken up. Wherever possible, Rain Water Harvesting (RWH) structure shall be constructed with a storage tank and a hand pump may be fixed above the storage tank.

**d) Repair to the existing school class room building and school land area.**

**The Following works are permitted:**

i) Repair / New / replacement of ramp with handrail to all buildings.

ii) Undertaking repairs of RCC roof (in terms of putting up weathering course with pressed tiles or taking up leak proofing etc.) along with, the provision for rainwater harvesting wherever the provisions are not available or damaged.

iii) Repairs of damaged tiles / rafters / reapers in buildings with tiled roofing.

iv) Repairs of cracks in building walls.

v) Repair / replacement of doors and windows

vi) Repair / replacement of damaged flooring

vii) Repair / replacement of wiring where there are issues with electrical fixtures

viii) Colour washing of the buildings with interiors using only oil painting and exterior using only emulsion. This is not applicable to those buildings where white washing / colour washing was done within the last 5 years under any other scheme. Painting of black boards or provision of green boards where required to ensure proper writing boards in classes is also permitted.

ix) Repair / build Sports infrastructure including ground levelling / rolling, providing fixed poles for different games and sports material.

**e) Repairs to existing kitchen sheds**

i) Existing kitchen shed building which are in damaged condition, can be repaired and renovated, if it is structurally stable and if not repaired for the last 5 years under any scheme.

**3. Selection and finalization of works:**

A. With regard to the selection and finalization of works the following procedures have to be followed:-

i) A committee comprising of following members should be constituted to list out the details of works to be done.

i) Block Development Officer (Block Panchayat)
ii) Assistant Engineer (RD) / Junior Engineer)
iii) Headmaster of the School

ii) The above committee members should inspect each and every building, utilities and play ground in the school, update the requirements in the EMIS (the HM of the school shall do this work) and finalize the works to be taken up in the Panchayat Union Primary and Middle Schools.

iii) The detailed format to finalize the repair works shall be communicated to the Districts, as "Assessment sheet", by the Director of Rural Development and Panchayat Raj.

iv) Once the works are finalized by the committee, the same shall be uploaded on the TNRD website (SIDS module) and EMIS module of Education department.

B. If the committee is of the opinion that a particular school building, kitchen shed or toilet is in dilapidated condition and requires total replacement, the committee shall recommend for demolition of the building. Accordingly, the Executive Engineer (RD) shall take necessary action for demolition of the building after following the due procedures stipulated in G.O.(Ms) No.56 RD&PR (SGS.4) Dept., Dt.03.04.2008 and amendment issued vide G.O.Ms.No.28, RD & PR (SGS.4) Dept., dated 23.2.2015.

C. The progress of the works shall be uploaded on the SIDS module on the TNRD website regularly.

D. The School Education Department will develop the platform and modules to record identified works and track progress on EMIS for Rural Department officials at Block, District and State levels.

**4. <u>Test verification of the works proposed:</u>**

It is imperative that, from the beginning itself extensive field visits backed by proper test checks should be undertaken at the stage of preparation of estimates itself which would facilitate in preparing exact estimates. The test checks conducted should be recorded in TNRD web site and EMIS. During the test check, the following should be ensured:

i) Any essential item of work has not been wrongly excluded.
ii) Unnecessary items of work have not been wrongly included.
iii) Detailed estimates have been prepared.
iv) Any item not permitted in this scheme has not been included.

The following officials shall do the test verification of the schools as detailed below:

| | | | |
|---|---|---|---|
| i) | District Collector | : | 1% |
| ii) | Project Director, District Rural Development Agency | : | 10% |
| iii) | Executive Engineer(RD) | : | 20% |

100% verification should be done by the Assistant Director level officers / AEEs(RD).

**5. <u>Administrative Sanction:</u>**

The administrative sanction shall be accorded by the District Collector. Before according administrative sanction, the District Collector should ensure that every proposal for administrative sanction contains the following:

i) "Assessment sheet" duly signed by members of the selection committee mentioned in paragraph No.3.
ii) Required percentage of test check by District Level Officials and 100% verification by AD/AEE (RD) level officers have been satisfactorily completed as mentioned in paragraph No. 4.

iii) Detailed estimates for each work should be prepared. In any case, no work should be proposed as per rough cost estimate.

iv) Multiple photographs indicating inner and outer view of the school building, kitchen shed / toilet should be taken and enclosed along with the estimate itself. If photographs are not enclosed, Administrative Sanction should not be given by the District Collector.

**Note:** For the purpose of fixation of number of works or to have comprehensive estimates, the works may be treated as follows.

- Demolition work, if any should be treated as one work.
- All school building / class room repairs, in the school campus shall be treated as one work.
- All toilet repairs in school shall be treated as one work.
- All kitchen shed repairs in the school shall be treated as one work.
- All water supply repair works in the school shall be treated as one work.
- All other repair works like compound wall, gate, sports facilities should be treated as one work.

**Illustration:**

If in a school campus, 2 school building, 2 toilets, 1 kitchen shed are to be repaired and 1 new water supply and one Chulha works are to be taken up, then the number of works shall be fixed so as:

1 School building repair work
1 Toilet repair work
1 Kitchen shed repair work
Provision of 1 new water supply
Provision of 1 new Chulha

Thus, totally 5 works should be taken up in the campus.

**6. Tendering of works:**

Since the works under this scheme are to be executed across the district covering all the Panchayat Unions, to ensure uniformity, quality and effective monitoring at District level, DRDA will be the implementing agency. The Project Director, DRDA shall be tender inviting authority. After finalisation of tender, work / supply order shall be issued by the District Collector. The works shall be executed by adopting the Tamil Nadu Transparency in Tenders Act 1998 and Rules 2000 and also as per the provisions of table I of notification II in the Tamil Nadu Panchayats (Preparation of plans and estimate of works and mode and conditions of contracts) Rules, 2007 vide G.O.(Ms).No.203 RD&PR (PR.1) Department dated:20.12.2007 and amendments issued in this regard vide G.O.Ms.111, Rural Development and Panchayat Raj Department, Dated.21.08.2018.

All the maintenance / repair works within a school shall be treated as **one work for tendering purpose**. For example, 1 school building repair, 1 toilet building repair, 1 kitchen shed building repair will be grouped into one package and the tender shall be invited for the package. Separate tenders should be called for each of the new works such as toilet and water supply works.

**7. Funds:**

i) The total allocation for the School Infrastructure Development Scheme in the Budget Estimate for the year 2021-22 is Rs.115.78 crore.

ii) A separate Bank Account has to be opened in the name of District Collector / Chairman, District Rural Development Agency to implement the Scheme.

iii) In the earlier instances (ie) during 2019-20 and 2020-21, the amount required for the Revamped Comprehensive School Infrastructure Development Scheme has been met out from the capital Grant fund - 20% State Level component.

iv) Likewise, for the year 2021-22, proposed amount of Rs.115.78 crore shall be met from out of the Capital Grant fund (20%) earmarked for State Level component.

v) This amount of Rs.115.78 crore may be deducted at the Directorate level and the same may be appropriated to the section concerned dealing with the School Infrastructure Development Scheme in the Directorate.

vi) This amount of Rs.115.78 crore may be allocated District wise as per the SFC formula.

vii) The fund will be released to the District Collectors from this Directorate based on the progress reported by the District Collectors.

**8. Documentation:**

Documentation should be done detailing various processes in the implementation of the scheme, starting from identification of the works, during execution of works upto the completion. The Before and after photos and status of completion of works should be recorded in EMIS. Once the work is over, the fact that the school repair/renovation works has been completed, the name of the scheme i.e., **School Infrastructure Development Scheme (SIDS)** should be prominently displayed in Tamil along with the amount incurred on a portion of the building renovated. High Resolution photographs should be sent to Directorate of Rural Development and Panchayat Raj immediately after completion of the works in CD and official mail id.

The Principal Secretary to Government, Rural Development and Panchayat Raj Department, in consultation with the Director of Rural Development and Panchayat Raj, is empowered to modify any of the above guidelines based on exigencies that may arise from time to time.

**P.AMUDHA**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

**//TRUE COPY//**

23-3-2022
**Section Officer**

**(அரசாணை (நிலை) எண்.36, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அ.தி.1) துறை, நாள் 23.03.2022)**

**இணைப்பு**

**2021– 2022–ஆம் ஆண்டிற்கான பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்ட செயலாக்கத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள்.**

**முன்னுரை:–**

ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளிலுள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகள் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களின் சொத்தாகும். இப்பள்ளிகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை பராமரித்தல் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994–ல் பிரிவு 112 –ன்படி ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகும்.

ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளான பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தல் போன்றவற்றை கட்டமைத்துத் தருவது, இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இந்த திட்டம் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளின் மேம்பாட்டைப் படிப்படியாக உயர்த்த வழிவகுக்கும்.

**1. பள்ளிகளை தேர்வு செய்தல்**

பள்ளிகள் யாவும் குறிப்பிட்ட வருடத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்–II செயல்படுத்தப்படும் கிராமங்களில் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். நகர்ப்புற பகுதிகளில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய பள்ளிகளையும் தேர்வு செய்யலாம்.

பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் போன்ற பணிகள் மேற்கொள்வதற்கு முன் கட்டமைப்பு உறுதித் தன்மை குறித்து உதவி செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி அவர்களின்) சான்று பெறப்பட வேண்டும்.

கடந்த ஐந்தாண்டுகளில் வேறு எவ்வித திட்டத்திலும் பழுது நீக்கம் மற்றும் புனரமைத்தல் பணிகள் மேற்கொள்ளப்படாத ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில் மட்டுமே தேவையின் அடிப்படையில் பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தல் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகளின் ஒப்புதலின்றி புதிய பள்ளிக் கட்டட கட்டுமானப் பணி எடுத்துச் செய்தல் கூடாது.

**2. பழுது நீக்கம் மற்றும் புனரமைத்தல் பணிகளின் வகைப்பாடு**

பள்ளிகளில் ஏற்கனவே இருக்கும் வசதிகளில் உள்ள பழுதுகளை, பழுது நீக்கம் செய்வதற்கு, கீழ்க்காணும் முன்னுரிமையின்படி பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**அ). ஏற்கனவே உள்ள கழிப்பறைகளை பழுது நீக்கம் செய்தல்**

ஏற்கனவே உள்ள கழிப்பறைகளில் கீழ்க்கண்ட பழுது நீக்கப் பணிகளை எடுத்துச் செய்யலாம்.

i. ஏற்கனவே உள்ள பள்ளி கழிப்பறைகளின் கான்கிரீட் கூரை, சுவர்கள், தரைகள், வடிகால்கள், கழிப்பறை கோப்பை, கழிவுநீர்த் தொட்டி ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள பழுது நீக்கம் / புனரமைத்தல் பணிகளை செய்யலாம்.

ii. தேவை ஏற்படும் இடங்களில், தரை மற்றும் உட்புற சுவர்களில் சுகாதார ஓடுகள் (Sanitary Tiles ) பதிக்கலாம்.

iii. கழிப்பறைகளில் குழாய் அல்லது நீர் தேக்க தொட்டி அமைத்து அதன் மூலம் தண்ணீர் வசதி ஏற்படுத்த வேண்டும்.

iv. கழிப்பறைகளுக்கு வெள்ளை / கலர் வர்ணம் பூசலாம் (5 வருடங்களுக்குள் பிற திட்டங்களின் கீழ் வெள்ளை / கலர் வர்ணம் பூசப்பட்ட கட்டடங்கள் தவிர)

**ஆ). எரியூட்டிகளுக்கு பதிலாக புகையில்லா அடுப்புகளை அமைத்தல்:**

எரியூட்டிகளுக்குப் பதிலாக புகையிலா அடுப்பு (Chulhas) அமைக்கப்படலாம். புதிய எரியூட்டிகள் அமைப்பது தவிர்க்கப்பட வேண்டும். புகையிலா அடுப்பு அமைக்கப்படும் போது, மாணவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும்.

**இ). ஏற்கனவே உள்ள குடிநீர் வசதி அமைப்புகளுக்கான பழுது நீக்கம் செய்தல்:**

**பணிகள்:**

i. பள்ளிகளில் ஏற்கனவே உள்ள குடிநீர் வசதி அமைப்புகள் பழுதடைந்து இருப்பின், அவை பழுது பார்க்கப்பட்டு பள்ளிக்கு குடிநீர் வழங்கப்பட வேண்டும்.

ii. தேவை ஏற்படும் இடங்களில் குடிநீர் குழாய் நீட்டிப்பு பணிகள் மேற்கொள்ளலாம்.

iii. ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப்பள்ளிகளின் அனைத்து கழிப்பறைகளிலும் குறிப்பாக மாணவிகள் பயன்படுத்தும் கழிப்பறைகளில் தண்ணீர் வசதி உறுதிபடுத்தப்பட வேண்டும்.

iv. புதிய குடிநீர் இணைப்புகள் தேவைப்படின் அருகிலுள்ள குடிநீர் இணைப்புகளிலிருந்து அல்லது ஊராட்சியின் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியிலிருந்து சிறிய மேல்நிலை சேகரிப்பு தொட்டியுடன் கூடிய வசதி செய்து கொள்ளலாம். பிற பயன்பாடுகளுக்கு ஆழ்குழாய் கிணற்றினைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

v. சிண்டெக்ஸ் தொட்டிகள் மட்டுமே அமைக்கப்பட வேண்டும். சிமெண்ட் / கான்கிரீட் தொட்டிகள் தவிர்க்கப்பட வேண்டும். தேவையான இடங்களில் புதிய ஆழ்துளை கிணறு அமைக்கலாம். சாத்தியமான இடங்களில் மழைநீர் சேகரிப்பு தொட்டிகள் கட்டி அதன்மேல் கைபம்பு அமைக்கலாம்.

**ஈ).ஏற்கனவே உள்ள பள்ளி வகுப்பறை கட்டடம் மற்றும் பள்ளி நிலத்தை பழுதுபார்த்தல்:**

கீழ்க்கண்ட பணிகள் அனுமதிக்கப்படுகிறது :-

i. பழுதடைந்த சாய்தளங்களை பழுது நீக்கம் செய்தல், கைப்பிடியுடனான புதிய சாய்தளம் அனைத்துக் கட்டடங்களிலும் அமைத்தல்.

ii. பழுதடைந்த கான்கிரீட் கூரைகளை பழுது பார்க்கும் பணியினை மேற்கொள்ளும்போது (தண்ணீர் கசியாத வகையில் சுண்ணாம்பு நீர் கலவை (Weathering course) சேர்த்தல் அல்லது தட்டோடு பதித்தல் போன்றவை), மழைநீர் சேகரிப்பு இல்லாமல் இருப்பின் அல்லது பழுதடைந்திருப்பின், அவ்விடங்களில் அந்த வசதியை ஏற்படுத்தி தரலாம்.

iii. சிறிதளவு பழுதடைந்த ஓடுகள்/உத்திரம்/ ஓடுகள் வேயப்பட்ட கட்டடங்களிலுள்ள பட்டிகள் பழுதுபார்த்தல்.

iv. கட்டட சுவர்களில் ஏற்பட்ட விரிசல்களை பழுதுபார்த்தல்.

v. பழுதடைந்த கதவுகள் மற்றும் சன்னல்களை பழுதுபார்த்தல் / மாற்றியமைத்தல்.

vi. பழுதடைந்த தரையை பழுதுபார்த்தல் / மாற்றியமைத்தல்

vii. பழுதடைந்த மின்கம்பிகளால் (wire), மின்சாதனங்கள் இயக்குவதில் இடையூறு உள்ள இடங்களில், அத்தகைய மின்கம்பிகளை மாற்றியமைத்தல்.

viii. கட்டடங்களுக்கு உள்ளே எண்ணெய் வண்ணங்களும் (oil painting) கட்டடங்களுக்கு வெளியே எமெல்சன் (emulsion) வண்ணங்களும் பயன்படுத்தப்பட வேண்டும். இது கடந்த 5 வருடங்களுக்குள் யாதொரு திட்டத்திலும், கட்டடங்களுக்கு வெள்ளை/கலர் வர்ணம் பூசுதல் பணி மேற்கொள்ளப்பட்ட பள்ளிகளுக்கு பொருந்தாது. கரும்பலகைகளுக்கு

வண்ணமடித்தல் அல்லது பச்சை வண்ணப் பலகைகள் அமைத்து வகுப்புகளில் எழுது பலகைகள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

ix. விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை (விளையாட்டு மைதானத்தினை உருளை கொண்டு சமன் செய்தல்) உருவாக்குதல் மற்றும் பழுதுபார்த்தல், பலதரப்பட்ட விளையாட்டுகளுக்கான நிரந்தர கம்பங்கள் (Poles) அமைத்தல், விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல் போன்ற விளையாட்டு கட்டமைப்பு பணிகளை செய்யலாம்.

**உ). ஏற்கனவே உள்ள சமையலறைகளை பழுது நீக்கம் செய்தல்** :

பழுதடைந்த ஆனால் கட்டமைப்பு உறுதியான நிலையிலுள்ள சமையலறைக் கூடங்கள் 5 வருடங்களுக்குள் பிற திட்டங்களின் கீழ் பழுதுபார்க்கும் பணி மேற்கொள்ளப்படாதிருப்பின் பழுதுபார்த்தல் / புதுப்பித்தல் பணி மேற்கொள்ளலாம்.

**3) பணிகள் தெரிவு செய்தல் மற்றும் இறுதி செய்தல்:**

**அ.** பணிகளை தேர்வு செய்து, இறுதி செய்கையில் கீழ்க்கண்ட செயல்முறைகளை கடைபிடித்தல் வேண்டும்:–

i. செய்யப்படவேண்டிய பணிகள் குறித்த முழு விவரங்கள் அடங்கிய பட்டியல் தயார் செய்ய கீழ்க்கண்ட உறுப்பினர்கள் அடங்கிய குழு அமைக்கப்பட வேண்டும்

   i) வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ)

   ii) உதவி பொறியாளர் (ஊ.வ) / இளநிலை பொறியாளர்

   iii) பள்ளி தலைமையாசிரியர்

ii. மேற்படி குழுவானது ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய ஆரம்ப பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளி கட்டடங்கள், பயன்பாடுகள், விளையாட்டு மைதானங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்து தேவைகளை கல்வி மேலாண்மைத் தகவல் மையத்தின் (Educational Management Information System) இணைய தள பக்கத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்(தலைமையாசிரியர் EMIS ல் பதிவேற்றம் செய்வார்). இக்குழுவானது ஊராட்சி ஒன்றிய ஆரம்ப / நடுநிலைப்பள்ளிகளில் எடுக்கப்பட வேண்டிய பணிகளை இறுதி செய்யும்.

iii. பழுதுபார்த்தல் பணிகளை இறுதி செய்ய வேண்டி "மதிப்பீட்டுத்தாள்" எனப்படும் விரிவான படிவம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்களால் அனுப்பி வைக்கப்படும்.

iv. பணிகள் பட்டியல் இறுதி செய்யப்பட்டவுடன், அவை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் இணையதளத்திலும், பள்ளிக் கல்வித் துறையின் கல்வி மேலாண்மைத் தகவல் மையத்தின் module –லிலும் பதிவேற்றம் செய்யப்படும்.

**ஆ.** ஒரு குறிப்பிட்ட பள்ளிக் கட்டடம், சமையலறைக்கூடம் அல்லது கழிப்பறை, பாழடைந்த நிலையில் உள்ளதை முழுவதுமாக மாற்றியமைக்கப்பட வேண்டும் என குழு கருதினால், அந்த கட்டடத்தை இடிக்க பரிந்துரை செய்யலாம். அதன்படி, அரசாணை (நிலை) எண். 56, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி–4) துறை, நாள்.03.04.2008–ல் மற்றும் அரசாணை எண்.28 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அ.தி.4) துறை, நாள்:23.02.2015–ல் வெளியிடப்பட்டுள்ள திருத்தம் ஆகியவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி, உரிய வழிமுறைகளை பின்பற்றி கட்டடத்தை இடிக்க செயற்பொறியாளர் (ஊ.வ) உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இ. இப்பணிகளின் முன்னேற்றம் www.tnrd.gov.in இணையதளத்திலுள்ள (SIDS module)-ல் பதிவேற்றம் தொடர்ந்து செய்யப்பட வேண்டும்.

ஈ. ஒன்றிய, மாவட்ட மற்றும் மாநில அளவில் உள்ள ஊரக வளர்ச்சி துறை அலுவலர்களுக்காக, கண்டறியப்பட்ட பணிகளை பதிவேற்றம் செய்யவும் அவற்றின் முன்னேற்றத்தினை EMIS module வாயிலாக கண்காணிக்கவும், பள்ளிக் கல்வித்துறையால் ஒரு தளம் மற்றும் module உருவாக்கப்படும்.

**4. தேர்வு செய்யப்பட்ட பணிகளை சோதனை சரிபார்ப்பு:**

மதிப்பீடு தயாரிப்பதற்கு, ஆரம்பம் முதல் முறையான கள ஆய்வு மேற்கொள்ளுதல் அவசியம் ஆகும். அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட பணிகளை, சோதனை முறையில் சரிபார்த்தால்தான் சரியான மதிப்பீடு தயாரிக்க ஏதுவாயிருக்கும். சோதனை சரிபார்த்தல் பணி (Test check) TNRD இணையதளத்திலும் EMIS ல் பதியப்பட வேண்டும். மேலும், சரிபார்த்தல் பணியின் போது கீழ்க்கண்டவைகளை உறுதி செய்ய வேண்டும்.

i. பணிகளில் தேவையான இனம் ஏதாவது தவறுதலாக விடுபட்டுள்ளதா ?
ii. பணிகளில் தேவையில்லாத இனம் தவறுதலாக சேர்க்கப்பட்டு உள்ளதா ?
iii. விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளதா ?
iv. இத்திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்படாத இனம் எதுவும் சேர்க்கப்படவில்லை.

பணிகள் தேர்வு செய்யப்பட்ட பள்ளிகளில், சோதனை சரிபார்ப்பை கீழ்க்கண்ட அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும்.

1. மாவட்ட ஆட்சியர் : 1%
2. திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை : 10%
3. செயற்பொறியாளர் (ஊ.வ) : 20%

உதவி இயக்குநர் நிலை அலுவலர்கள் / உதவி செயற்பொறியாளர் (ஊ.வ) 100 சதவீதம் சரிபார்ப்பு மேற்கொள்ள வேண்டும்.

**5. நிர்வாக அனுமதி**

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட வேண்டும். நிர்வாக அனுமதி வழங்கும் முன் ஒவ்வொரு கருத்துருவுடன் கீழ்க்கண்ட ஆவணங்கள் உள்ளனவா என்பதை உறுதி செய்ய வேண்டும்:-

i. பத்தி 3-ல் குறிப்பிட்டுள்ள தேர்வுக்குழுவிலுள்ள உறுப்பினர்களால் கையொப்பமிடப்பட்ட "மதிப்பீட்டுத் தாள்" .
ii. பத்தி 4-ல் குறிப்பிட்டுள்ளவாறு, மாவட்ட அளவிலான அலுவலர்களால் உரிய சோதனை சரிபார்த்தல் மற்றும் உதவி இயக்குநர் / உதவி செயற்பொறியாளர் நிலை அலுவலர்கள் 100% சோதனை சரிபார்த்தலை திருப்திகரமாக நிறைவு செய்ததை உறுதி செய்தல்.
iii. ஒவ்வொரு பணிக்கும் விரிவான மதிப்பீடு தயார் செய்ய வேண்டும். எத்தகைய நிலையிலும் தோராய மதிப்பீட்டின் அடிப்படையில் கருத்துரு அனுப்புதல் கூடாது.
iv. பள்ளி கட்டடம் / சமையலறைக்கூடம் / கழிப்பறை கட்டடங்களின் உள் மற்றும் வெளிப்புறத்தோற்றத்தின் பல்வேறு புகைப்படங்கள் மதிப்பீட்டுடன் இணைக்கப்பட வேண்டும். புகைப்படங்கள் இணைக்கப்படவில்லை எனில் மாவட்ட ஆட்சித் தலைவரால் நிர்வாக அனுமதி வழங்கப்படகூடாது.

**குறிப்பு: -**

வேலைகளின் எண்ணிக்கையை உறுதி செய்யும் நோக்கத்திற்காகவும் அல்லது வேலைகளின் விரிவான மதிப்பீடுகள் பெறவும் பணிகளை கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்:-

- கட்டடங்களை இடிப்பது ஒரு வேலையாக கருதப்படும்.

- ஒரு பள்ளி வளாகத்திற்குள் உள்ள அனைத்து பள்ளி கட்டடம் / வகுப்பறை பழுது பார்ப்பதை ஒரு வேலையாக எடுத்துக் கொள்ள வேண்டும்.
- ஒரு பள்ளியிலுள்ள அனைத்து கழிப்பிடங்களையும் பழுது பார்ப்பதை ஒரு வேலையாக எடுத்துக் கொள்ள வேண்டும்.
- ஒரு பள்ளியிலுள்ள சமையலறையின் பழுதுகள் அனைத்தையும் ஒரே வேலையாக எடுத்துக் கொள்ள வேண்டும்.
- ஒரு பள்ளியில் பழுது பார்க்கப்படும் அனைத்து குடிநீர் வசதிக்கான வேலைகளையும் ஒரு வேலையாக எடுத்துக் கொள்ள வேண்டும்.
- பள்ளி சுற்றுச்சுவர், வாயிற்கதவு, விளையாட்டு வசதிகள் ஆகிய பழுதுபார்த்தல் பணிகளை ஒரு வேலையாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

**எடுத்துக்காட்டு:–**

ஒரு பள்ளி வளாகத்திற்குள் 2 பள்ளி கட்டடங்கள், 2 கழிப்பறைகள், 1 சமையலறை கூடம் ஆகியவற்றை பழுதுபார்த்தல் பணிகள் மற்றும், 1 புதிய குடிநீர் பணி மற்றும் புதிய புகையில்லா அடுப்பு அமைக்கும் பணி ஆகிய பணிகளை எடுக்கும் பொழுது கீழ்க்கண்டவாறு பணிகளின் எண்ணிக்கை நிர்ணயம் செய்யலாம்:–

1–பள்ளி கட்டடம் பழுதுபார்க்கும் பணி
1–கழிப்பறை கட்டடம் பழுதுபார்க்கும் பணி
1–சமையலறைக் கூடம் பழுதுபார்க்கும் பணி
1–புதிய குடிநீர் பணி
1–புதிய புகையில்லா அடுப்பு

இவ்வாறாக அவ்வளாகத்திற்குள் மொத்தமாக 5 வேலைகள் எடுக்கப்பட வேண்டும்.

**6. <u>வேலைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி</u>**

இத்திட்டத்தின் கீழ் எடுத்து செய்யப்படும் அனைத்து பணிகளும், மாவட்டத்தில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் மேற்கொள்ளப்படுவதால், சீரான, தரமான மற்றும் பயனுள்ள கண்காணிப்பினை உறுதி செய்யும் பொருட்டு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இத்திட்ட செயலாக்க நிறுவனமாகும். திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஒப்பந்தப் புள்ளி கோரும் அதிகாரம் உடையவராவார், ஒப்பந்தம் முடிவு செய்யப்பட்டவுடன், பணி ஆணை மாவட்ட ஆட்சித் தலைவரால் வழங்கப்படும். 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவு மறைவு அற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் மற்றும் விதிகள் 2000–ன் படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, அரசாணை நிலை எண்.203, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ப.ரா–1) துறை. நாள். 20.12.2007–ல் வெளியிடப்பட்ட தமிழ்நாடு ஊராட்சிகள் (வேலையின் வரைபடம் தயாரித்தல் மற்றும் வேலையின் மதிப்பீடு தயாரித்தல் மற்றும் மாதிரி ஒப்பந்த நிபந்தனைகள்) விதிகள் 2007 அட்டவணை I–ல் உள்ள அறிவிக்கை–II–ல் தெரிவித்துள்ள நடைமுறைகளை பின்பற்றியும் மற்றும் அரசாணை நிலை எண்.111, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ப.ரா–1) துறை நாள். 21.08.2018–ல் வெளியிடப்பட்டுள்ள திருத்தங்களையும் பின்பற்றி செயல்படுத்த வேண்டும்.

ஒரு பள்ளியில் உள்ள அனைத்து பராமரிப்பு / பழுதுபார்ப்பு பணிகள் ஒப்பந்தப்புள்ளி கோரும்பொழுது ஒரே பணியாக எடுத்துக் கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக பள்ளிக் கட்டடம் பழுதுபார்த்தல் / கழிப்பறை பழுதுபார்த்தல் / சமையலறைக் கூடம் பழுதுபார்த்தல் ஆகிய பணிகள் ஒரே தொகுப்பாக கணக்கிடப்பட்டு, அத்தொகுப்பிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட வேண்டும். புதிய கழிப்பறை மற்றும் புதிய குடிநீர் பணிகளுக்கு தனித்தனியே ஒப்பந்தப்புள்ளி கோரப்பட வேண்டும்.

**7. நிதி வழங்குதல்**

i. 2021–22-ம் ஆண்டிற்கு பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்திற்கு மொத்த நிதி ரூ.115.78 கோடியாகும்.

ii. இத்திட்டத்தை செயல்படுத்த மாவட்ட ஆட்சியர் / தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, பெயரில் தனியாக வங்கிக் கணக்கு தொடங்கப்பட வேண்டும்.

iii. ஏற்கனவே 2019–20 மற்றும் 2020–21 ஆண்டிற்கான நிகழ்வுகளில், மறுசீரமைக்கப்பட்ட விரிவான உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்கு தேவைப்படும் நிதியானது 20% மாநில அளவிலான மூலதன மானிய நிதியிலிருந்து வழங்கப்பட்டது.

iv. 2021–22ம் ஆண்டிற்கு உத்தேசிக்கப்பட்ட ரூ.115.78 கோடியும், மாவட்ட திட்டமிடல் குழுவிற்கான 20% மாநில அளவிலான மூலதன மானிய நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

v. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்கக அளவில் மேற்குறிப்பிட்டுள்ள ரூ.115.78 கோடி பிடித்தம் செய்யப்பட்டு, பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் செயல்படுத்தப்படும் பிரிவில் பெறப்பட்டு, மாவட்டங்களுக்கு வழங்கப்படும்.

vi. மாநில நிதிக்குழுவின் கணக்கீட்டின்படி ரூ.115.78 கோடி மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

vii. மாவட்ட ஆட்சியரால் தெரிவிக்கப்படும் முன்னேற்றத்தின் அடிப்படையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரால் மாவட்ட ஆட்சியர்களுக்கு நிதி விடுவிக்கப்படும்.

**8. ஆவணப்படுத்துதல்**

இத்திட்டத்தில் வேலைகளை அடையாளம் காணுதல் முதற்கொண்டு, அதனை முடிக்கும் வரையிலான அனைத்து விரிவான, பலவிதமான நிலைகளிலும் ஆவணங்கள் தயாரிக்க வேண்டும். வேலை தொடங்குவதற்கு முன்பு, முடிவுற்ற பின்பு எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மற்றும் முழுமை பெற்ற பணியின் நிலை ஆகியவற்றை EMIS–ல் பதிவேற்றப்பட வேண்டும். வேலை முடிக்கப்பட்ட பின்பு, அதாவது பள்ளி பழுதுபார்த்தல் / புனரமைத்தல் பணிகள் முடிவுற்ற பின்னர், திட்டத்தின் பெயர், **"பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்",** பழுதுபார்த்தல் / புனரமைத்தல் மற்றும் செலவிடப்பட்ட தொகை ஆகியவை கட்டடத்தின் ஒரு பகுதியில், தெளிவாக தமிழில் எழுதப்பட வேண்டும். பணிகள் முடிவுற்றதும், குறுந்தகடு மற்றும் மின்னஞ்சல் வாயிலாக தெளிவான புகைப்படங்கள் (High Resolution photographs) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

மேற்காணும் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அவ்வப்போது ஏற்படும் அவசர சூழ்நிலைகளுக்கேற்ப ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரை கலந்தாலோசித்து, தேவையான மாறுதல்களை செய்ய அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

**பெ.அமுதா**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**//உண்மை நகல்//**

23-3-2022
**பிரிவு அலுவலர்.**